ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தமிழ்நாடு

சிவகங்கை மாவட்டம்

எஸ்.புதூர் வட்டாரம்.

அறிவிக்கை (Notification)

அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கு நேரடி நியமனம்

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியம், ஒன்றியத் தலைப்பின்கீழ் ஊதியம் வழங்கப்படும் அலுவலக உதவியாளர்கள் நிலையில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிட சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அலுவலக உதவியாளர்கள் பணிநியமனத்திற்கு விண்ணப்பிக்க தேவையான தகுதிகள், காலிப்பணியிடங்கள் விபரம், இனச்சுழற்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்பப்படிவம் ஆகியவை இம்மாவட்டத்தின் WWW.Sivaganga.tn.nic.in இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது. காலிப்பணியிடத்திற்கான விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 03.12.2019 மாலை 5.45 வரை அலுவலக நேரத்தில் தொடர்புடைய ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், எஸ்.புதூர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களின் விபரம்.

காலிப்பணியிடம் : 1

| வ. எண் | ஒன்றியத்தின் பெயர் | பணியிடம் விபரம்/ எண்ணிக்கை | | இனச்சுழற்சி |
|---|---|---|---|---|
| 1 | எஸ்.புதூர் | அலுவலக உதவியாளர்கள் | 1 | பொதுப்பிரிவினர்/ முன்னுரிமை |

அலுவலக உதவியாளர்கள் தகுதி - எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்.

| இனம் | வயது |
|---|---|
| பொதுப்பிரிவினர் | விண்ணப்பிக்கும் அன்று 18 வயது பூர்த்தி அடைந்தும் 01.07.2019 அன்று 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: | 3.12.2019 மாலை 5.45 |

- அலுவலக உதவியாளர் பணிக்கு ஊதிய கட்டு ரூ15700-50000 (நிலை-1) ஊதியம் நிர்ணயம் மற்றும் இதரபடிகள்.

Scanned by CamScanner

நிபந்தனைகள்:-

- சிவகங்கை மாவட்டம் எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வித் தகுதி, இருப்பிடம் (ரேசன் கார்டு மற்றும் ஆதார் கார்டு), சாதிச்சான்று முன்னுரிமை சான்று, இதர சான்றிதழ் நகலினை சான்றொப்பம் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
- இனச்சுழற்சி, வயது மற்றும் கல்வி தகுதி அற்ற நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் தவறு என பரிசீலனையில் கண்டறியப்பட்டால், அவரது விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படும்.
- நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்வதற்கு பயணப்படி ஏதும் வழங்கப்பட மாட்டாது.
- தகுதியுள்ள விண்ணப்ப தாரருக்கு நேர்முக தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம்(call letter) அனுப்பி வைக்கப்படும்.
- விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களிடம் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ 03.12.2019 தேதி அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- நியமனத்தை ரத்து செய்வதற்கான அனைத்து அதிகாரமும் ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளருக்கே உண்டு

19/11/19

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
எஸ்.புதூர்.

Scanned by CamScanner